**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22–ஆம் நாள் வெள்ளிகிழமை**
**அசல் வழக்கு எண் – 152/2018**
**CNR No: TNAL050002122018**

1. வெங்கடேசன்.
2. செந்தமிழ்செல்வன்.
3. பெரியசாமி. – வாதிகள்

/எதிர்/

1. மகாராஜன்.
2. சீனிவாசன்.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக. – பிரதிவாதிகள்

தாவா (பாதை) சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகளுக்குள்ள பாதை புழங்குரிமை பாத்தியத்தை விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக வாதிகளின் நிம்மதியான அனுபவத்தில் வாதிகளால் பாதையாக பராமரிக்கப்பட்டு வரும் தாவா சொத்தில் பிரதிவாதிகள் எந்தவித ஆக்கிரமிப்பும், தடையும் மரக்கிளைகள் கள்ளி, செடிகள் படர்ந்தும், படல் தென்புறம் திறந்து வைத்தும் படலை தென்புறம் திறந்து வைத்து இடையூறு செய்யாவண்ணம் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா சொத்தை பொறுத்து அதன் பூஸ்திதி அளவுகள்படி Detailed Pathway –ஆக (பாதையாக) Classified செய்து வருவாய் ஆவணங்களை ஏற்படுத்த 3–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், இன்னும், சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தம்யுக்தமாக தோன்றும் இதர பரிகாரங்கள் வழங்கிட உத்திரவாக வேண்டி வாதிகள் பிரார்த்திக்கிறார்கள்.

இவ்வழக்கானது 22.09.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.M.அன்புமொழி அவர்கள் முன்னிலையாகியும், 1–வது பிரதிவாதி தரப்பில் திரு.M.பிரான்ஸிஸ் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பில் யாரும் ஆஜரில்லை. போதிய வாய்ப்புகள் வாதிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்தும், இவ்வழக்கு நீண்டகாலம் நிலுவையில் இருக்கும் வழக்குகளின் கீழ் வருகிறது. வாதிகள் தங்களது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை. எனவே நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– திரு.ச.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**வாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

ஒப்பம்/– திரு.ச.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

––––––––––––––––––––––––––––

கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.152/2018
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்:22.09.2023.

––––––––––––––––––––––––––––